DITTO WS

Reg. No. : ......................................

Name : ..........................................

**SY-12**

# SECOND YEAR HIGHER SECONDARY EXAMINATION, MARCH 2020

Part – II

**TAMIL**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**1 முதல் 4 வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. மதிப்பெண் 1 வீதம்.** **(4 × 1 = 4)**

1. 'தமிழே! நீ ஒரு பூக்காடு; நானோர் சிறு தும்பி' எனப் பாடியவர்
   (அ) கவி மணி (ஆ) பாரதியார்
   (இ) கண்ணதாசன் (ஈ) பாரதிதாசன்

2. 'அறிவியல் சிறு கதைகள்' என்ற தொகுப்பு நூலின் ஆசிரியர்
   (அ) மாலன் (ஆ) ஆர்னிகா நாசர்
   (இ) க. முருகேசன் (ஈ) வா. செ. குழந்தைசாமி

3. 'மீதூண் விரும்பேல்' என்று கூறியவர்
   (அ) காக்கை பாடினியார் (ஆ) ஔவையார்
   (இ) நச்செள்ளையார் (ஈ) ஒக்கூர் மாசாத்தி

4. 'பார் நடக்கும் பசி நடக்காதே!' என்ற தொடர் இடம் பெறும் நூல்
   (அ) கம்பராமாயணம் (ஆ) சிலப்பதிகாரம்
   (இ) சீவக சிந்தாமணி (ஈ) பெரிய புராணம்

**5 முதல் 9 வரையிலான வினாக்களுள் எவையேனும் 3 வினாக்களுக்கு விடை தருக. மதிப்பெண் 3 வீதம் .** **(3 × 3 = 9)**

5. 'ஹோலோகிராம்' – சிறு குறிப்பு வரைக.

6. கீழ்க்கண்ட உணவுத் திண்பண்டங்களில் பாரம்பரியமானவை ஆறினை எடுத்து எழுதுக.
   இட்லி, லேசு, முருக்கு, பீட்ஸா, சீடை, குர்குரே, உப்புமா, பரோட்டா, நூடுல்ஸ், பணியாரம், வடை, பர்கர்

DITTO WS

7. பண்டையத் தமிழகத்தின் முப்பெரும் பிரிவுகளைக் குறிப்பிடுக.

8. கீழ் வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விளக்கம் எழுதுக.
நடுகல், மரபுத் தொடர்

9. விவசாய தினத்தை முன்னிட்டு உங்கள் பள்ளியில் வெளிவரவிருக்கும் 'பாரம்பரிய விவசாயம்' என்ற மலரில் வெளியிட 'நெல் சேமிக்கும் முறைகள்' என்னும் தலைப்பில் பெட்டிச் செய்தி தயார் செய்க.

**10 முதல் 14 வரையுள்ள எவையேனும் 3 வினாக்களுக்கு விடை எழுதுக. 4 மதிப்பெண் வீதம்** **(3 × 4 = 12)**

10. கீழே கொடுக்கப்பட்டுள்ள திருக்குறள்களுக்கு விளக்கக் குறிப்பு எழுதுக.
"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழன்றும் உழவே தலை"
"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

11. கீழே தரப்பட்டுள்ள சிலப்பதிகாரம் குறிப்பிடும் பதினொரு வகைக் கூத்துகளில் நான்கினை எழுதுக.
அல்லியம், கொடை, குடை, கோவை, மரக்கால், பாவை

12. "உள்ளத்தில் உறுதியும் உண்மையான உழைப்பும் இருந்தால் இலட்சியம் என்றும் தோற்பதில்லை" என்னும் கூற்றுடன் உடன்படுகின்றாயா? காரண காரியத்தடன் விளக்குக.

13. கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியைத் தூய தமிழில் எழுதுக.
"ரெண்டு பயலுகளும் எங்கல போய்ட்டு வாரீக? மேலப்பட்டியில் துட்டுக்குப் போய்ட்டு வரோம்சாமி. துட்டிக்குப் போன ஒங்க தெரு ஆட்களெல்லாம் மத்தியானமே வந்துட்டாகளே, ஒங்க ரெண்டு பேத்துக்கு மட்டும் என்னல இம்புட்டு நேரம்? நாங்க ரெண்டு பேரும் கோவில்பட்டி போயி வாரோம் சாமி, கோவில் பட்டியில என்னல சோலி ஒங்களுக்கு"

14. பின்வரும் தமிழக் கலைச் சொற்களுக்கு இணையான ஆங்கிலச் சொற்களை அடைப்புக்குறிக்குள்ள சொற்களில் இருந்து எடுத்தெழுதுக.
*1) நிகழ்ச்சி நிரல் 2) திருத்து 3) பதிவேடு 4)பேச்சு அஞ்சல்*
*( Architecture, Voice mail, Programme, Edit, Register)*

**15 முதல் 18 வரையுள்ள வினாக்கள் எவையேனும் 3 க்கு விடை எழுதவும். மதிப்பெண் 5 வீதம்.** **(3 × 5 =15)**

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதைகளுக்கு ஒபபீட்டுக் குறிப்பு எழுதுக.
"இம்மை மாறி மறுமை யாயினும்
நீயாகியர் என் கணவனை
யானகியர்நின் நெஞ்சு நேர்பவளே" – சங்கப் பாடல்

"செத்து மடிஞ்சாலும் செலவழிஞ்சு போனாலும்
செத்த இடத்தினிலே செஙகழுநீர்ப் பூ பூப்பேன்
மாண்டு மடிஞ்சாலும் வைகுந்தம் போனாலும்
பஞ்சணை மெத்தையிலே படுக்கை மலர் – நானாவேன்"
– நாட்டுப்புறப் பாடல்

DITTO WS

16. கீழே தரப்பட்டுள்ள கவிதையை நயம் பாராட்டி எழுதுக.
“விஷ மருந்துகளும்
உப்பு உரங்களும்
நம்ம நிலத்தைக் கெடுத்து
நம்ம நிலத்தைப் புண்ணாக்கி
நம்ம நிலத்தைக் குற்றுயிர் ஆக்கிவிட்டன”

17. விளையாட்டு என்பது வாழக்கைக்குப் பயிற்சியளிக்கும் களமாகும். “கிராமிய விளையாட்டுக்கள் வளர்க்கும் நற்பண்புகள்’ என்ற தலைப்பில் வானொலி உரை தயார் செய்க.

18. கீழே தரப்பட்டுள்ள பகுதியை வாசித்துக் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.
“பழங்காலத்தில் கோயில்களுக்கு விளை நிலங்கள் தானமாக வழங்கும் முறை எங்கும் பரவலாக இருந்துள்ளது. கோயில்களுக்குத் தேவையான செலவுகளுக்காகவே இவ்வாறு நிலங்கள் தானம் செய்யப்பட்டன. நிலத்தில் விளையும் நெல்லைக் கொண்டு பொருட்கள் வாங்கிக் கோயில் செலவுகளை நடத்த வேண்டும். இவ்வாறு சிவன் கோயில்களுக்கு விடப்பட்ட நிலங்கள் தேவதானம் எனவும், வைணவக் கோயில்களுக்கு விடப்பட்ட நிலங்கள் திருவிடையாட்டம் எனவும், சமண, பௌத்தப் பள்ளிகளுக்கு விடப்பட்ட நிலங்கள் பள்ளிச் சந்தம் எனவும் பல்வேறு பெயர்களால் அறியப்பட்டன”

(அ) கோயில்களுக்கு விளை நிலங்கள் ஏன் தானமாக வழங்கப்பட்டன? (1 மதிப்பெண்)

(ஆ) சிவன் கோயில்களுக்கு விடப்பட்ட நிலங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன ? (1 மதிப்பெண்)

(இ) பழங்காலத்தில் எதைத் தானமாகக் கோயில்களுக்கு வழங்கினர் ? (1 மதிப்பெண்)

(ஈ) ‘பள்ளிச் சந்தம்’ என்றால் என்ன? (1 மதிப்பெண்)

**19 முதல் 24 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 4 க்கு விடை எழுதவும். மதிப்பெண் 6 வீதம். (4 × 6 = 24)**

19. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் குழந்தைகள் மேம்பாடு குறித்த சிறப்பு மலரில் இடம் பெறச் செய்வதற்காக, ‘கைலாஷ் சத்யார்த்தியின் சமூகப் பணிகள்‘ என்ற தலைப்பில் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை தயார் செய்க.

| | | |
|---|---|---|
| பெயர் | : | கைலாஷ் சத்யார்த்தியின் |
| ஊர் | : | மத்தியப்பிரதேச மாநிலம், விதிஷா மாவட்டம் |
| வசித்தல் | : | தில்லி |
| படிப்பு | : | மின்னியல் துறை பொறியாளர், மின்னழுத்தம் குறித்த முதுகலைப் படிப்பு |
| பணி | : | கல்லூரி விரிவுரையாளர், போபால் |
| சமூகப் பணிகள் | : | குழந்தைப் பாதுகாப்பு இயக்கம், குழந்தைத் தொழிலாளர்களைப் பாதுகாக்கப் பேரணிகள் நடத்தியவர், கொத்தடிமைகள் மீட்பு |
| பரிசு | : | நோபல் பரிசு |

DITTO WS

20. பள்ளி இலக்கிய மன்றத்திற்கு துவக்கி வைக்க வருகை தரவிருக்கும் எழுத்தாளர் திரு. மாலன் நாராயணன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துரை தயார் செய்க.

21. உங்கள் ஊரில் தென்னை மேம்பாட்டு வாரியம் சார்பாக நடத்தவிருக்கும் விழிப்புணர்வு முகாமில் பங்கேற்பதற்காக வருகை தரவிருக்கும் தென்னை வணிக முன்னோடி திரு து. பாண்டியராஜன் அவர்களை நேர்முகம் காண்பதற்காக ஆறு வினாக்கள் அடங்கிய வினா நிரல் தயார் செய்க.

22. தமிழ் இலக்கியங்களில் ஊடுருவித் திகழும் தமிழர் பண்பாட்டு விழுமியங்களைத் தொகுத்து எழுதுக.

23. பள்ளி ஆண்டு விழா மலரில் இடம் பெறச் செய்வதற்காக, 'வலைத்தள ஆபத்துகளும் தீர்வுகளும்' என்ற தலைப்பில் விழிப்புணர்வுக் கட்டுரை தயார் செய்க.

24. துரித உணவுகளின் புற்றீசல் போன்ற வருகையால் தமிழரின் பாரம்பரிய உணவு முறைகளில் ஏற்பட்ட ஆரோக்கியமற்ற மாற்றங்களை உணர்த்தும் விதமாக 'துரித உணவுகள் ஆபத்தே!' என்ற தலைப்பில் பத்திரிகைத் தலையங்கம் தயார் செய்க.

**25 முதல் 27 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 2 க்கு குறிப்புகளைப் பயன்படுத்தி 2 பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை எழுதக. 8 மதிப்பெண் வீதம் (2 × 8= 16)**

25. உடல் ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாத்து நோயற்று வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்தும் பொருட்டு, " நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற தலைப்பில் சிறப்புக் கட்டுரை தயார் செய்க.
*(இன்பமான வாழ்வு, நோயற்ற வாழ்வு, நீண்ட நாள் வாழ்தல்)*

26. கேரள விவசாயப் பல்கலைக் கழகம், 'சுற்றுச் சூழலைக் காக்கும் இயற்கை வழி வேளாண்மை' என்ற தலைப்பில் சொற்பொழிவு நடத்துகின்றது. இதில் பங்கேற்க உரைக் குறிப்பு தயார் செய்க.
*(சுற்றுச் சூழல் பாதுகாப்பு, இயற்கை வேளாண்மை, மண் வளமடைதல்)*

27. தேசிய ஒருமைப்பாட்டு தினத்தை முன்னிட்டு அரசு சார்பில் வெளிவரவிருக்கும் கேரளச் சமூகச் சீர்திருத்தச் செம்மல்கள் என்ற சிறப்பு மலரில் இடம் பெறச் செய்வதற்காக, "சமூக மறுமலர்ச்சியும் திரு. நாராயண குருவும்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.
*[சாதி ஒற்றுமை, சமய ஒற்றுமை, பல்வேறு சமூகப் பணிகள்]*

---